**செய்தி வெளியீடு எண்: 68/2022** **நாள்: 30.07.2022**

## பத்திரிக்கை செய்தி

## சென்னை மெட்ரோ இரயில் நிலையங்களில் பயண அட்டை அதிகம் விற்பனை செய்யும் பயணசீட்டு வழங்கும் பணியாளர்களுக்கு ஊக்க பரிசு வழங்கபடும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் ராஜேஷ் சதுர்வேதி தகவல்

சென்னை மெட்ரோ இரயில் நிலையங்களில் பயண அட்டை அதிகம் விற்பனை செய்யும் பயண சீட்டு வழங்கும் பணியாளர்களுக்கு ஊக்கபரிசு வழங்கபடும் என்றும், ஒவ்வொரு மாதமும் அவர்களை ஊக்குவிக்கும் வகையில் ரூ.1000 மதிப்பிலான பரிசு பொருள் வழங்கப்படுவதாகவும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் திரு. ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்) தெரிவித்துள்ளார். அதன்படி, அதிகமாக பயணசீட்டு விற்பனை செய்த பணியாளர்களுக்கு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் திரு. ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்) விம்கோ நகர் மெட்ரோ இரயில் நிலையத்தில் இன்று (30.07.2022) பரிசுகளை வழங்கினார்.

இதுகுறித்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் திரு. ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்) மேலும் தெரிவித்ததாவது:

சென்னை மெட்ரோ இரயில் 41 மெட்ரோ இரயில் நிலையங்களிலும் பயணசீட்டு வழங்கும் பணியாளர்களுக்கு ஒவ்வொரு மாதமும் அவர்களை ஊக்குவிக்கும் வகையில் ரூ.1000 மதிப்பிலான பரிசு பொருள் வழங்கப்படுகிறது. தற்போது மெட்ரோ இரயிலில் பயணிக்கும் பயணிகளில் பெரும்பாளோர் க்யூ.ஆர் குறியீடு பயணசீட்டு முறையை பயன்படுத்தி வருகிறார்கள். க்யூ.ஆர் குறியீடு மற்றும் பயண அட்டையை பயன்படுத்தி பயணிப்போர்க்கு 20 சதவீதம் கட்டண சலுகை வழங்கி வருகிறது. பயணிகள் பயண அட்டையை பயன்படுத்தும்போது 20 சதவீதம் கட்டண சலுகை கிடைப்பதோடு, வரிசையில் நிற்க வேண்டாம்.

தற்போது 13 லட்சத்து 89 ஆயிரத்து 225 நபர் பயண அட்டை பெற்றுள்ளார்கள். இதில் நாள்தோறும் 3 லட்சத்து 25 ஆயிரம் நபர்கள் பயண அட்டையை பயன்படுத்தி வருகிறார்கள். ஒரு பயண அட்டை பெரும் போது வாங்கிய நாளில் இருந்து 5 ஆண்டு வரை பயன்படுத்தலாம். ஆண்டு இறுதி நாளில் அதே பயண அட்டையை புதுபித்து கொண்டால் மீண்டும் 5 ஆண்டு பயன்படுத்தி கொள்ளலாம். 5 ஆண்டுக்கு ஒருமுறை புதுபித்து கொள்ளும் வசதியும் உண்டு. வாழ் நாள் முழுவதுமே ஒரே பயண அட்டையை புதுபித்து பயன்படுத்தி கொள்ளலாம் என்று தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து, சென்னை மெட்ரோ இரயிலில் பயணிக்கும் தாய்மார்களின் வேண்டுகோளுக்கு இணங்க விம்கோ நகர் மெட்ரோ இரயில்

நிலையத்தில் பச்சிளம் குழந்தைகளுக்கு பாலூட்டும் அறை அமைக்கப்பட்டு தாய்மார்களின் பயன்பாட்டிற்க்கு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் திரு. ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்) இன்று (30.07.2022) திறந்து வைத்தார். பச்சிளம் குழந்தைகளுக்கான பாலூட்டும் அறை இனிவரும் காலங்களில் ஒரு சில மெட்ரோ இரயில் நிலையங்களில் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் கூடுதல் பொது மேலாளர் எஸ். சதீஷ்பிரபு, மேலாளர் கே.எஸ்.அருண் (இயக்கம்), துணை மேலாளர் ஏ.அருள்ராதா (இயக்கம்) மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**